JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
CC.No.184/2021
PW 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | அரசப்பன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | திருவேட்டநல்லூர் | வயது | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 14.05.2026

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது திருவேட்டநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி பெருமாள் என்ற கோபால் 2வது எதிரி திருவளர்செல்வம் என்ற செல்வம், 3வது எதிரி ரவீந்திரன், 4வது எதிரி சண்முகராஜ் ஆகியோர்களை தெரியும். என் மகனை அடித்தவர்கள். அசா.1 ராஜதுரை என் மகன். அசா.2 அரசப்பன் என்ற முத்துக்காளை, அசா.3 வெங்கடேஷ்,அசா.4 வைரமுத்து, அசா.5 முத்துசாமி, அசா.9 மாதவன், அசா.10 முருகன் என்ற வடிவேல் முருகன் ஆகியோர்களை தெரியும். என் ஊர்க்காரர்கள். கடந்த 2020ம் வருடம் 5வது மாதம் தேதி நினைவில் இல்லை.நான் என்னுடைய ஊரில் இருந்த போது என் மகனுடன் திருவளர்செல்வம், மகேஷ், ரவீந்திரன், சண்முகராஜ் ஆகியோர்கள் சண்டை போட்டதாக சொன்னார்கள்.

உடனே நான் புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் மகனுக்கு கை, கால்களில் காயம் இருந்தது. பின்னர் என் மகனை மேல் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சி அரசப்பன், முத்துக்காளை, வெங்கடேசன், வைரமுத்து, மாதவன், முத்துசாமி, முருகன் என்ற வடிவேல் முருகன் ஆகியோர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். என் மகன் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றார் என்றுஎனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சரிதான். சொன்னார்கள். என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. என் மகனுக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. என் மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றாலும், டிராக்டரில் செல்லும் போது மது பாட்டில் வைத்திருந்து அது கீழே தவறி விழுந்து அந்த மது பாட்டிலால் ஏற்பட்ட காயத்தை வைத்து அசா.1 என் மகன் என்பதால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த சம்பவத்தையும் கேள்விப்படவில்லை என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi